# ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2025.07.04 |


**2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி மீதான தீர்மான நடவடிக்கையை நிறைவேற்றுதல்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட நிதிக் கம்பனியொன்றான நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன் கீழ் விடுக்கப்பட்ட பல்வேறு பணிப்புரைகளையும் விதிகளையும் தொடர்ச்சியாக மீறி/ மறுத்து வந்திருக்கின்றது. மேலும், போதுமானதற்ற மூலதன மட்டம், சொத்துக்களின் மோசமான தரம், தொடர்ச்சியான இழப்புக்கள் மற்றும் வைப்பாளர்களின் பணத்தினைக் கோருகின்ற அல்லது முதிர்வடைகின்ற போது மீளச் செலுத்தத் தவறுதல் போன்ற காரணங்களினால் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சியின் நிதியியல் நிலைமை திருப்திகரமானதாக காணப்படவில்லை.

நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுடனும் அதன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் விதிகளுடனும் இணங்கியொழுகுவதற்கு நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இற்கு இலங்கை மத்திய வங்கியினால் பல தடவைகள் கால நீடிப்புக்கள் வழங்கப்பட்டபோதிலும் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சியினால் நெருக்கடி நிலைமைகளை மீளெழுச்சிப்படுத்தும் விதத்தில் திருப்திகரமான முன்னேற்றங்கள் அடையப்படவோ அத்தகைய ஏற்பாடுகள் பணிப்புரைகள் மற்றும் விதிகளுக்கு இணங்கியொழுகவோ திருப்திகரமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இற்கு பல ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் திருப்திகரமான முன்னேற்றம் இல்லாத காரணத்தால், 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் 2025.07.04 அன்று தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி மீது தீர்மான நடவடிக்கைகளை தொடங்குவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.

நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி பற்றிய நிதிசார் மற்றும் நிதிசாரா நிலைமைகளின் முழுமையான மதிப்பீடொன்றின் விளைவாகவும் இனங்காணப்பட்ட பிரச்சனைகளை சீர்செய்வதற்கு கம்பனிக்கு போதிய வாய்ப்பினை வழங்கிய பின்னருமே இத்தீர்மான நடவடிக்கையினைத் தொடங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில், தீர்மானச் செயல்முறைக்கமைய வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இற்கு நிர்வாகியொருவரை நியமிக்க இலங்கை மத்திய வங்கி தீர்மானித்தது. அதற்கமைய, 2025.07.04 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் நிர்வாகியாக திரு . பி டபிள்யூ டி என் ஆர் ரொட்ரிகோ அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிர்வாகி, நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் அனைத்து சொத்துகள், உரிமைகள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் விவகாரங்கள் மீதான முழுமையான கட்டுப்பாட்டைப் பொறுப்பேற்று, நிறுவனத்தின் பெயரிலும் அதன் சார்பிலும் அதன் வியாபார நடவடிக்கைகள் மற்றும் விவகாரங்களை முன்னெடுப்பார்.

கம்பனியின் தற்போதைய நிதியியல் நிலைமை மேலும் சீர்குலைவிற்கு வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்துவதைக் கருத்தில் கொண்டு, தீர்மான அதிகாரியாக செயல்படும் இலங்கை மத்திய வங்கி, வைப்பாளர்களினதும் கடன்கொடுநர்களினதும் நலன்களைப் பாதுகாக்கவும், நிதி முறைமையின் நிலைத்தன்மை மற்றும் நேர்மையினைப் பேணவும் இத்தீர்மானத்தை எடுத்துள்ளது,

கம்பனி மீது நிதியியல் கடப்பாடுகளைக் கொண்டுள்ள நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் அனைத்து அக்கறை கொண்ட தரப்பினர்களும் உரிய ஒப்பந்தங்களுக்கமைவாக கம்பனிக்கான அவர்களது ஒப்பந்தக் கடப்பாடுகளை நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் பெயரின்கீழான வங்கிக் கணக்கொன்றின் ஊடாக மாத்திரம் உரிய காலத்தில் நிறைவுசெய்யுமாறும் அனைத்து கொடுப்பனவுகளுக்கான பதிவுகளைப் பேணுமாறும் ஆலோசனை வழங்கப்படுகின்றது. மேலும் நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி இன் அனைத்து அக்கறை கொண்ட தரப்பினர்களும் இது தொடர்பில் மத்திய வங்கியுடன் ஒத்துழைக்குமாறு தயவுடன் கோரப்படுகின்றனர்.

மேலதிகத் தகவல்கள் பொருத்தமானவாறும் பொருத்தமான போதும் இலங்கை மத்திய வங்கியினால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும்.

மேலதிக விசாரணைகளுக்கு:

| தொடர்புகொள்ள வேண்டிய நபர்/ நிறுவனம் | நோக்கம் | தொலைபேசி இலக்கங்கள் | மின்னஞ்சல் முகவரி |
|---|---|---|---|
| நிர்வாகி | வைப்புகள், முற்பணத் தீர்ப்பனவு மற்றும் வேறு தெளிவுபடுத்தல்கள் தொடர்பிலான விசாரணைகள் | 0762050360<br>துரித அழைப்பு - 0729007007* | nihalrodrigo177@gmail.com |
| இலங்கை மத்திய வங்கியின் துரித அழைப்பு | பொதுவான விசாரணைகள் | 1935 | cbslgen@cbsl.lk |
| வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானங்கள் திணைக்களம் | தீர்மானச் செயன்முறை பற்றிய விசாரணைகள் | 0112477261 | resolution@cbsl.lk |

* இந்த தொலைபேசி இலக்கம் 07.07.2025 முதல் செயல்பாட்டில் இருக்கும்.